**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.142/2022 |
| Deposition of Witness for | : | PW –4 |
| Name and Age | : | கௌரன்–62 |
| Father / Husband Name | : | வேடியப்பன் |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | போலபகுத்தனஅள்ளி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –10.11.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 to A3, A5, A6, A8, A9 Present. A4, A7 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**அ.சா – 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் போலபகுத்தனஅள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் புகார்தாரின் குடும்பமும், ஆஜர் எதிரிகளும் அவர்களது குடும்பமும் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் 2–வது எதிரி முத்து வீட்டில் இருந்து 600 அடி தொலைவில் உள்ள என்னுடைய வீட்டில் நான் இருந்தபோது மாலை சுமார் 5.00 மணிக்கு சகாதேவன் மற்றும் முத்து வீட்டிற்கு அருகே கெட்ட வார்த்தையால் பேசி சண்டை போட்டுக்கொள்ளும் சத்தம் கேட்டு உடனே சென்று பார்க்க புகார்தாரர் குடும்பமும், ஆஜர் எதிரிகள் குடும்பமும் சண்டையை போட்டு விட்டு கலைந்து சென்று கொண்டிருந்தார்கள். அதனால் நானும், திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டேன். வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது. இது குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சி செய்ய அனுமதி கோரி அனுமதி வழுங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் சகாதேவன், முத்து ஆகியோர்கள் எனக்கு தாய்வழி மாமா உறவினர் ஆவார்கள். பரசுராமன் என்ற ராமனும் எனக்கு மாமா உறவுமுறையாவார். சாட்சி சின்னகண்ணு எனக்கு என்னுடைய மாமா கோவிந்தசாமியின் மனைவி ஆவார். சாட்சி சந்தோஷ் மாமாவின் பேரன் ஆவார். எதிரிகள் குடும்பமும், புகார்தாரர் குடும்பமும் பங்காளிகள் என்றால் சரிதான். அதனால் 2 தரப்பு குடும்பத்திற்கு இடையே நிலதகராறு இருக்கிறதா என்றால் உள்ளது. வாய்வழி சண்டை மட்டும் போட்டுக்கொள்வார்கள். அந்த நிலதகராறு காரணமாக கடந்த 19.08.2021 ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு கிராமத்தில் உள்ள சந்தோஷ் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்தில் சாட்சி சந்தோஷ் அவரது தாயார் ராஜாமணி அவரது பாட்டி சின்னகண்ணு ஆகியோர் இருந்தபோது அந்த

இடத்தில் சட்ட விரோதமாக ஒன்றுகூடிய வழக்கின் எதிரிகள் அவர்களை பார்த்த கெட்ட வார்த்தையால் வார்த்தையால் திட்டி, கையாலும், காலாலும் தாக்கி காயப்படுத்தி சாட்சி ராஜாமணியின் பெண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதை நேரில் பார்த்ததாகவும் சண்டையை சமாதன படுத்தி விலக்கி அனுப்பி வைத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், அவர்கள் கேட்டுகொண்டதாலும் எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.11.10 17:43:46 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | CC.No.142/2022 |
| Deposition of Witness for | : | PW –5 |
| Name and Age | : | சின்னசாமி–58 |
| Father / Husband Name | : | வேடியப்பன் |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | போலபகுத்தனஅள்ளி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** –10.11.2025.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 to A3, A5, A6, A8, A9 Present. A4, A7 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**அ.சா – 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் போலபகுத்தனஅள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.4 கௌரன் என் உடன் பிறந்த அண்ணன் ஆவார். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் புகார்தாரின் குடும்பமும், ஆஜர் எதிரிகளும் அவர்களது குடும்பமும் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இண்டுரில் உள்ள என்னுடைய மகள் வீட்டிற்கு நான் சென்றிருந்தபோது என்னுடைய மருமகள் கோகிலா மாலை சுமார் 7.00 மணிக்கு போன் செய்து எதிரிகள் குடும்பத்திற்கும், சந்தோஷ் குடும்பத்திற்கும் இடையே சண்டை நடந்ததாகவும் நிலதகராறு காரணமாக சண்டை ஏற்பட்டதாக கூறினார். மறுநாள் காலை நான் ஊருக்கு திரும்பி வந்துவிட்டேன். சண்டை நடந்த மறுநாள் மாலை சுமார் 4.00 மணிக்கு எதிரிகள் வீட்டிற்கும், புகார்தாரர் வீட்டிற்கும் இடையே சண்டை நடந்த இடத்தில் சகாதேவன் நிலத்திற்கும் லட்சுமணன் நிலத்திற்கும் செல்லும் பாதையில் சண்டை நடந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு எழுதி தயாரித்த ஆவணத்தில் நானும், மற்றொருவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். நான் கையொப்பம் போட்ட ஆவணம் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆகும். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்டை எங்கு ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

போலீசாருக்கு யார் சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் போலீசார் என்னிடம் அவர்களை விசாரித்ததற்கு சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.11.10 17:43:56 +0530

Judicial Magistrate,
Palacode.